**திருநெல்வேலி மாவட்டத்திற்கான வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கை**

**(ஏப்ரல் 14-ம் தேதி முதல் ஏப்ரல் 18-ம் தேதி வரை)**
**(வெளியீடு: வேளாண் வானிலை ஆலோசனை மையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவில்பட்டி மற்றும் இந்திய வானிலை துறை)**

**முந்தைய வார வானிலை (10.4.15– 12.4.15)**

| | |
|---|---|
| மழை (மி.மீ.) | 9.8 |
| அதிக பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 35- 37 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 25- 24 |
| வானம் (ஆக்டா) | 5 |
| ஈரப்பதம் (08:30 மணி) (சதவீதம்) | 72- 80 |
| ஈரப்பதம் (17:30 மணி) (சதவீதம்) | 47- 66 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) | 0- 4 |
| காற்றின் திசை | 0- 140 |

**18.4.15 அன்று 08:30 மணியுடன் முடிவடையும் காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பு**

| வானிலை காரணிகள் | வானிலை முன்னறிவிப்பு | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1<br>14.4.15 | நாள் 2<br>15.4.15 | நாள் 3<br>16.4.15 | நாள் 4<br>17.4.15 | நாள் 5<br>18.4.15 |
| மழை (மி.மீ.) | 18 | 8 | 14 | 12 | 12 |
| அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 34 | 35 | 34 | 34 | 35 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 23 | 23 | 24 | 24 | 23 |
| வானம் (ஆக்டா) | 7 | 6 | 7 | 6 | 6 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 62- 78 | 60- 76 | 62- 76 | 60- 75 | 62- 75 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) மற்றும் திசை | 5/ கிழக்கு | 4/ கிழக்கு | 5/ தென்கிழக்கு | 4/ கிழக்கு | 5/ தெற்கு |

வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் அதிகமான மேகமூட்டம், மிதமான மழை மற்றும் ஈரப்பதம் கொண்ட வானிலைக்கேற்ற வேளாண் வானிலை ஆலோசனைகள்

| பயிர் / சாகுபடி சூழல் | பருவம் /சாகுபடி செயல்கள் | வேளாண் வானிலை ஆலோசனை |
|---|---|---|
| பருத்தி | முதிர்ச்சி பருவம் | பருத்தியில் கடைசி அறுவடைக்குப்பிறகு பயிர்க்கழிவுகளை சுழல்வெட்டியை (rotoslasher) பயன்படுத்தி மண்ணோடு சேர்க்கவும். இவ்வாறு செய்வது மண்வளத்தை மேம்படுத்தவும் மண்ணின் ஈரத்தை பாதுகாக்கவும் உதவும். |
| மா | பூக்கும் பருவம் | மாமரத்தில் பூத்தலை ஊக்குவிக்க யூரியா 5 கிராம்/ லிட்டர் அல்லது பொட்டாசியம் நைட்ரேட் 10 கிராம்/ லிட்டர் என்ற அளவிலும் காய் பிடித்தலை |

| | | |
|---|---|---|
| | | மேம்படுத்த என்.ஏ.ஏ. (NAA) என்ற வளர்ச்சி ஊக்கியை 20 மில்லி கிராம்/ லிட்டர் என்ற அளவிலும் தெளிக்கவும். பிஞ்சு கடுகு அளவில் இருக்கும் பருவத்தில் பொட்டாசியம் நைட்ரேட் 20 கிராம்/ லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| கத்தரி | பூக்கும் மற்றும் காய்க்கும் பருவம் | கத்தரிக்கு மகசூலை மேம்படுத்த வளர்ச்சி ஊக்கியான டிரையாகான்டனால் 2 பி.பி.எம்.+ சோடியம் போரேட் அல்லது போராக்ஸ் 35 மி.கி./ லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |

குறுஞ்செய்தி- மழை: ஏப்ரல் 14- 18 தேதிகளில் முறையே 18, 8, 14, 12& 12 மி.மீ. வரும் தினங்களில் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் இறவை பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்வதை தவிர்க்கவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்
கோவில்பட்டி